தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1973 ஏப்ரல் 3

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Fifth Five-Year Plan

* 581 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Centre has consulted the State Government regarding the formulation of the Fifth Five Year Plan ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) மத்திய திட்ட ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்ட 'ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட அணுகுமுறை அறிக்கை' தேசீய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் முதலமைச்சர்களால் விவாதிக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்டது. அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு மாநில திட்ட வரைவுகளைத் தயாரிப்பதற்காக, மாநில அரசுகளுக்கு மத்திய அரசு வழிகாட்டிக் குறிப்புகளை வகுத்து வழங்கி வந்துள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவிற்குரிய செயற்குறிப்புகளைத் தயாரிக்கும் பணி மாநிலத் திட்ட ஆணைக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத் திட்டக் குழுவின் அறிக்கையினை அரசு ஆய்வு செய்து தமது மாநிலத் திட்டத்திற்கான வரைவை அரசு முடிவு செய்யும்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, இதுவரையிலும் முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்களிலெல்லாம் 'டன்ஸ் ஆஃப் வேர்ட்ஸ் பட் அவுன்ஸ் ஆஃப் ஆக்ஷன்' என்ற முறையில் இருந்தன. ஆகவே, இந்தத் திட்டத்திற்கும், அந்தத் திட்டங்களுக்கும் அணுகுமுறையிலும் 'அவுட்லுக்' கிலும் மாற்றம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அணுகுமுறையில் மாற்றங்கள் இருப்பதை ஏற்கெனவே நான் இந்த அவையில் பல முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த அணுகுமுறை எப்படி என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய ஏடுகளில் அதன் விவரங்கள் வெளிவந்ததைப் படித்திருக்கக் கூடும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் நமது மாநிலத்திற்கு எந்த அளவுக்கு உதவி கிடைக்கும், மத்திய அரசாங்கம் எவ்வளவு அவர்களுடைய ஸ்கீமுக்காகத் தருகிறார்கள் என்ற விவரத்தை முதலமைச்சர் தரமுடியுமா? அதுமட்டுமல்லாமல், இந்த மன்றத்தில் அது பற்றித் தனியாக விவாதம் நடத்த அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவைப்பற்றிதான் ஏற்கெனவே தேசிய வளர்ச்சிக் குழுவில்—டில்லியில் முதலமைச்சர்கள் மாநாட்டில்—விவாதிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு தொகை மொத்தத்தில் ஒதுக்குவது என்பதும் மாநிலங்களுக்கு எவ்வளவு என்பதும் இன்னும் இறுதியாக ஆக்கப்படவில்லை. அதுபற்றிய ஆரம்பம் இன்னும் செய்யப்படவில்லை. ஆனால் நம்மைப் பொறுத்த வரையில், நம்முடைய மாநிலத் திட்டக் குழுவினிடத்தில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவை அளிக்குமாறு கேட்டதற்கு 1,300 கோடி ரூபாய்க்கு நம்முடைய மாநிலத் திட்டக் குழு ஒரு திட்டத்தை இப்பொழுது நிறைவேற்றுவதற்கென அவர்களுடைய பரிந்துரையாக அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அரசு அதைப் பரிசீலித்து, எவ்வளவு தொகைக்குத் திட்டம் தீட்டலாம் என்பதைப் பிறகு முடிவு செய்யும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நமது மாநிலத் திட்டக் குழு 1,300 கோடி ரூபாய் அளவுக்குத் தீட்டியிருக்கிற அந்தத் திட்டத்திற்கும் மத்திய சர்க்கார் ஏற்கெனவே கொடுத்த 'ப்ளான் அப்ரோச்சுக்கும்' ஏதாவது மாறுபாடுகள் இருக்கின்றனவா? அப்படி மாறுபாடு இருந்தால் அதையும் பரிசீலனை செய்து இறுதியான குறிப்பு இங்கே சமர்ப்பிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலில் உள்ள வரைவுக்கான அணுகுமுறை, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், திட்டத்தின் அளவு பொறுப்பு குறித்த கருத்து, மற்ற வளர்ச்சி வீதம் குறித்த கொள்கையும் நிதிப் பொறுப்புகளும், வேலை வாய்ப்புகள், சமமான பகிர்வு—வட்டாரப் பகுதிகள் சம்பந்தப்பட்ட நிலை, குறைந்த அளவு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல், ஆகிய இந்த அணுகுமுறையின்படி அந்த வரைவுபற்றிய கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டு அதுபற்றி அங்கு எங்களுடைய கருத்துக்களை அந்தந்த மாநிலத்தின் சார்பில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். 1,300 கோடி

ரூபாய்க்கான திட்டம் இந்த அணுகுமுறையின் அடிப்படையிலேயும் நம்முடைய மாநிலத்தின் தேவைகளைப்பற்றிய நிலையை மனத்திலே வைத்துக் கொண்டும் திட்டப்பட்டதாகும். இதைப் பிறகு அரசு பரிசீலித்துத்தான், எவ்வளவு தொகை மத்திய அரசைக் கேட்பது என்று முடிவு எடுக்கும்.

திரு. எ. சுப்பிரமணியம் : 1,300 கோடி ரூபாய் செலவிற்கு திட்டமிட்டிருப்பதாக முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். இதற்கான வருவாய் வாய்ப்புகள் எந்த எந்த வகையில் எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது அந்தந்த மாநிலத்தினுடைய ரிஸோர்ஸஸ் அடிப்படையில்தான் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். இன்றைக்குத் தான் நம்முடைய மாநிலத் திட்டக் குழு அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறது. திட்டத்திற்கு மொத்தம் எவ்வளவு தொகை ஒதுக்கப்படவேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்தெந்த சாத்தியக்கூறுகளில் அந்த வருமானங்கள் கணக்கிடப்படும் என்ற விவரங்களை என்றால் இப்பொழுது சொல்ல முடியாது. ஏனென்றால், மாநிலத் திட்டக் குழுவின் அறிக்கை முழுவதையும் நான் படிக்கவில்லை. அறிக்கை இப்பொழுதுதான் வந்திருக்கிறது.

தகவல் நிலையங்கள்

* 582 வினா—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்தில் தற்போது அமைக்கப்பட்டுள்ள தகவல் நிலையங்கள் (Information Centres) எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ் நாட்டில் தற்போது சென்னையில் மாநிலத் தகவல் நிலையம் ஒன்றும், மதுரையில் ஒரு தகவல் நிலையமும், தஞ்சாவூரில் ஒரு தகவல் நிலையமும் ஆக மொத்தம் மூன்று தகவல் நிலையங்கள் உள்ளன.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தத் தகவல்கள் முக்கியமாக ஆற்றும் பணிகள் என்ன என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அங்கு நூல் நிலையங்கள், படிப்பகங்கள் இவைகளெல்லாம் இருக்கின்றன. அவற்றின் மூலமாக அரசைப் பற்றிய தகவல்களையும் பல்வேறு இலாக்காக்களைப்பற்றிய தகவல்களையும் தெரிந்து கொள்ளலாம்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, கோவையில் ஒரு தகவல் நிலையத்தை ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா ? இந்த ஆண்டே அதைத் துவக்க முடியுமா ?